தரம் 6

# இரண்டாம் தவணைப் பரீட்சை ~ 2016

## தமிழ்மொழியும் இலக்கியமும்

சேர்விலக்கம் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) ஆசை மிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே! என்பதில் ஆசை என்பதன் ஒத்தகருத்து யாது?

1. வெறுப்பு 2. நிராசை 3. விருப்பம் 4. பேராசை

(2) நாம் நல்ல குறிக்கோள்களைக் கொண்டு வாழ வேண்டும். குறிக்கோள் என்பதன் ஒத்தகருத்து யாது?

1. மகிழ்ச்சி 2. நட்பு 3. கருத்து 4. இலட்சியம்

(3) நன்மை காலம் முற்றிலும் நட்பு செய்து வாழ்ந்தவர். நட்பு என்பதன் எதிர்ப்பதம் யாது?

1. பகை 2. ஒற்றுமை 3. வேற்றுமை 4. தவறு

(4) மழவராயன் புகழ்ச்சியை விரும்பினான். புகழ்ச்சி என்பதன் எதிர்க்கருத்து யாது?

1. பெருமை 2. சிறுமை 3. பாராட்டு 4. இகழ்ச்சி

(5) தலைவனுக்கு தலைவி என்பது போல குணவானுக்கு

1. மனைவி 2. குணவதி 3. குணவி 4. குணவாட்டி

(6) அறுபதாவது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா

1. பொன்விழா 2. முத்து விழா 3. அமுத விழா 4. மணி விழா

(7) பலாவின் பிஞ்சு மூசு போல மாவின் பிஞ்சு

1. வடு 2. கச்சல் 3. நுங்கு 4. குறும்பை

(8) மீனின் இளையது குஞ்சு போல அணிலின் இளையது

1. குட்டி 2. குஞ்சு 3. குருளை 4. பிள்ளை

(9) தேங்காய் என்பதைப் பிரித்தெழுதுக.

1. தென்னை + காய் 2. தேங் + காய் 3. தெங்கு + காய் 4. தேங்கு + காய்

(10) வெறுமை + இலை என்பதைப் புணர்த்தினால்

1. வெற்றிலை 2. வெறுமைஇலை 3. வெறும்மிலை 4. வெள்ளைஇலை



Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

(11) நிறைவேற்ற முடியாத ஒன்றைச் செய்வதற்குத் திட்டமிடுவதை விளக்கும் பொருத்தமான உவமைத்தொடர்

1. ஆற்றிலே கரைத்த புளி போல
2. விழலுக்கிறைத்த நீர் போல
3. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல
4. ஆண்டிகள் மடம் கட்டியது போல

(12) பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவாது என்ற பழமொழியின் பொருள் கொண்ட இன்னொரு பழமொழி

1. பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்.
2. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது.
3. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
4. ஆறு கடந்தால் அண்ணனென்ன தம்பி என்ன?

(13) மனைவியை இழந்தவன்

1. ஆத்திகன்
2. பிரம்மச்சாரி
3. நாத்திகன்
4. தபுதாரன்

(14) பல்லுக்கடித்தல் என்ற மரபுத்தொடர் தரும் பொருள்

1. ஏளனம் செய்தல்
2. துன்பத்தை சகித்தல்
3. இரந்து வேண்டுதல்
4. பழித்தல்

(15) இடக்கு முடக்கு என்பது

1. மரபுத்தொடர்
2. அடுக்கிடுக்குத்தொடர்
3. அடுக்குத்தொடர்
4. இணைமொழித்தொடர்

(16) கரையான்கள் வீட்டைக் கட்டி முடித்தன. இவ்வாக்கியத்தில் செயற்படுபொருள்

1. கரையான்கள்
2. கட்டி முடித்தன
3. வீடு
4. கட்டி

(17) நீங்கள் முயன்று பயின்றதனாலன்றோ நன்றாகப் ..........................

1. பாடுவீர்கள்
2. பாடுகிறீர்கள்
3. பாடலாம்
4. பாடுவோம்

(18) உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை

1. 12
2. 18
3. 30
4. 216

(19) மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன

1. ஐம்பொறி
2. ஐம்புலன்
3. ஐம்பூதம்
4. பஞ்சபூதம்

(20) மாசற்றார் கேண்மை மறவட்கு இங்கு. கேண்மை என்பதன் கருத்து

1. குற்றம்
2. துன்பம்
3. நட்பு
4. ஒழுக்கம்

(20x2=40 புள்ளிகள்)



Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

## பகுதி II

முதலாம், இரண்டாம் , மூன்றாம் வினாக்கள் உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**(1)** பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் கட்டுரை எழுதுக.

1. நான் பறவையானால்
2. கிழிந்த புத்தகத்தின் சுயசரிதை
3. நான் இரசித்த கடற்கரைக் காட்சி
4. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

(15 புள்ளிகள்)

**(2)** திடீர் விபத்தில் தாயை இழந்த நண்பனுக்கு ஆறுதல் கூறி 50 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

**(3)** பின்வரும் சொற்களை வைத்து கருத்துப் புலப்பட வாக்கியம் அமைக்குக.

1. தவளை
2. மழை
3. ஊண்
4. ஈகை
5. அடிசில்

(10 புள்ளிகள்)

**(4)** **(அ)** பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

1. கடல் + கரை
2. வாழை + பழம்
3. மண் + குடம்
4. நிலம் + பரப்பு
5. அருள் + கொடை

**(ஆ)** பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. மரவேர்
2. பற்பொடி
3. பனையோலை
4. பூவரும்பு
5. காலைக்கூட்டம்

(10 புள்ளிகள்)

**(5)** பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தென்னை மரத்தை வளர்த்திடுவாய்
தேங்காய் இளநீர் பெற்றிடுவாய்
பனை மரத்தை வளர்த்திடுவாய்
பயன்கள் யாவும் பெற்றிடுவாய்

மா மரத்தை வளர்த்திடுவாய்
மகிழ்ந்தே கனிகள் உண்டிடுவாய்
பலா மரத்தை வளர்த்திடுவாய்
பகிர்ந்து உண்டு மகிழ்ந்திடுவாய்



Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

வாழை மரத்தை வளர்த்திடுவாய்
வளமாய் உடல் நலம் பெற்றிடுவாய்
பப்பாசி மரத்தை வளர்த்திடுவாய்
பள பள மேனி பெற்றிடுவாய்

பழ மரங்கள் வளர்த்திடுவாய்
பல்லாண்டு நலமாய் வாழ்ந்திடுவாய்
வீட்டில் மரங்கள் வளர்த்திட்டால்
விளங்கும் நாடு செழிப்பாகும்.

1. தென்னை மரத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் யாவை?
2. வளமான உடல் நலம் பெற எம்மரத்தை வளர்க்க வேண்டும்?
3. வீட்டில் மரங்கள் வளர்ப்பதால் நாட்டுக்கு கிடைக்கும் நன்மை யாது?
4. இப்பாடலில் இடம்பெறும் இரட்டைக்கிளவிச் சொல் ஒன்று எழுதுக.
5. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்து தருக.
   (அ) பழம் (ஆ) வீடு (இ) உடல்

(10 புள்ளிகள்)

(6) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தி ஒன்றை அமைக்குக.

1. அவை மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள், தாதுப்புக்கள் என்பனவாகும்.
2. புரதச்சத்து, திசுக்களைப் புதுப்பித்து உடல் வளர்ச்சிக்கு உதவும்.
3. உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை ஐந்து வகையாகப் பிரிப்பர்.
4. தாதுப்புக்களும், உயிர்ச்சத்துக்களும் நோய் எதிர்ப்புச் சக்தியையும், பாதுகாப்பையும் அளிக்கின்றன.
5. கொழுப்பும், மாச்சத்தும் உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கின்றன.
6. இவை அனைத்தும் இன்றியமையாதன.

(10 புள்ளிகள்)

(7) பாடநூலை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. "பறவைகள் பலவிதம்" என்ற பாடத்தில் வரும் மோவாஸ் பறவையின் முட்டையின் ஓடு எதற்குப் பயன்படுகிறது?
2. "கொட்டாங்கச்சி நானாகி குவலயத்திலுள்ளவர்க்கு சாதங்கறி வகைகள் சமைப்பெதுமென்னாலே......" இங்கு கொட்டாங்கச்சி எனப்படுவது யாது?
3. புதிய ஆத்திச்சூடியைப் பாடியவர் யார்?
4. ஏறு போல் நட என்பதன் கருத்து யாது?
5. கண்ணகியின் தந்தையின் பெயர் யாது?

(10 புள்ளிகள்)



Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner